சாட்சிய வாக்கு மூலம்

(அத்தியாயம் 25 பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதா)

1989 ஆண்டு இயற்றப்பட்ட பட்டியல் சாதியினர் மற்றும் பழங்குடியினர்

( வன்கொடுமை தடுப்பு ) சட்டத்தின் கீழான

வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு நீதிமன்றம் ,

திருவாரூர் - 610 001

தேதி: 07.03.2026

| | | |
|---|---|---|
| சிறப்பு அமர்வு வழக்கு எண். | : | **62/2025** |
| சாட்சியின் வரிசை எண். | : | அ.சா-11 |
| சாட்சியின் பெயர் | : | சுப்பிரமணியன் |
| தந்தை பெயர் | : | அன்னதுரை |
| கிராமம் | : | பனவடலிசத்திரம் |
| தாலுக்கா | : | சங்கரன்கோவில் |
| தொழில் | : | காவல் உதவி ஆய்வாளர் |
| வயது | : | 31 |

2026 ம் ஆண்டு மார்ச் மாதம் 07 ஆம் நாள் ஆகிய இன்று இந்த நீதிமன்றத்தில் இளநிலை உதவியாளராக பணிபுரியும் திரு.ஆர்.வீரபாண்டியன் அவர்களால் இந்த சாட்சிக்கு 1969-ம் ஆண்டு உறுதிமொழி சட்டத்தின் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு அதன் அடிப்படையில் சாட்சிய வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.

1 முதல் 5 எதிரிகள் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

எத்தனை மணிக்கு புகார் வாக்குமூலம் பெறப்பட்டது என்ற விபரம் முதல் தகவல் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் - குறிப்பிட்டுள்ளேன். முதல் தகவல் அறிக்கையில் முதல் பக்கத்தில் மட்டுமே குறிப்பிட்டுள்ளேன் என்றும், 2 வது பக்கத்தில் அதை குறிப்பிடவில்லை என்று சொன்னால் - ஆமாம்

அதை குறிப்பிடவில்லை. முதல் தகவல் அறிக்கையில் முதல் பக்கத்தில் 04.01.2025 நேரம் 13.30 மணி என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான் - தகவல் பெறப்பட்டு மனு ரசீது எண் கொடுக்கப்பட்டுள்ளது. புகார் வாக்குமூலத்தை யார் எழுதியது என்றால் நான்தான் எழுதினேன். அ.சா.1 கையொப்பம் மட்டும் செய்தார் என்றால் - அ.சா.1 படித்து பார்த்துதான் கையொப்பம் செய்தார். மனு ரசீது எத்தனை மணிக்கு போட்டேன் என்றால் - 01.01.2025 ம் தேதி 18.10 மணிக்கு மனு ரசீது தயார் செய்தேன். என்னை விசாரணை செய்த புலன் விசாரணை அதிகாரியிடம் மனு விபரங்களை சொல்லியுள்ளேனா என்றால்- சொல்லியுள்ளேன். முதல் தகவல் அறிக்கை தயார் செய்வதில் ஏற்பட்ட 4 நாட்கள் காலதாமத்தை எனது விசாரணையில் புலன் விசாரணை அதிகாரியிடம் கூறியுள்ளேனா என்றால கூறியுள்ளேன். நான் சொன்ன நாள், நேரம், சொன்னமாதிரி அ.சா.1 டமிருந்து புகார் வாக்குமூலம் பெறப்படவில்லை என்றால் சரியல்ல. அ.சா.1 யிடம் வெள்ளை பேப்பரில் கையொப்பம் பெற்று, எனது மேலதிகாரியின் உத்தரவின்பேரில் பூர்த்தி செய்து கொண்டேன் என்று சொன்னால சரியல்ல. சம்பவ இடத்திற்கு செல்லாமல், சாட்சிகளை சரிவர விசாரணை செய்யாமல், எதிரிகளின் மீது தவறாக வழக்கு பதிவு செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்கிற்கும், எதிரிகளுக்கும் எந்தவித சம்மந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

சாட்சி சொல்ல சொல்ல என் உத்தரவுப்படி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு பின் சாட்சியிடம் மேற்படி வாக்குமூலம் படித்துக் காண்பித்த போது சாட்சி சரியென்று என் முன்பாக கையொப்பம்செய்தார்.

VADIVEL M

Digitally signed by VADIVEL M
Date: 2026.03.07 16:07:27 +0530

அமர்வு நீதிபதி,
எஸ்.சி /எஸ்.டி (வன்கொடுமை தடுப்பு )
வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு
நீதிமன்றம், திருவாரூர்.